# அமிதாப் ஊழலில் தமிழக கம்யூனிஸ்ட்?

ராஜீவ் காந்தியின் பால்ய நண்பரான நடிகர் அமிதாப் பச்சனின் நடவடிக்கைகளில் ஸ்விஸ் நாட்டு வங்கி, ஸ்வீடன் பேரங்கள் தவிர இப்போது புதிதாக தமிழக டாக்டர் ஒருவர் பெயரும் சோவியத் யூனியனும் அடிபட ஆரம்பித்திருக்கின்றன.

ஆங்கில வார இதழான 'வீக்' பத்திரிக்கையின் பம்பாய் நிருபர் அசோக்ராவ்கவி, அமிதாப் பச்சனின் வியாபாரங்களைப் பற்றித் துருவி ஆராய்ந்து எழுதிய கட்டுரையில், அமிதாப் சோவியத் யூனியனுக்கு மருந்து ஏற்றுமதி செய்வதில் ஊழல் செய்து வருவதாகவும், அதில் டாக்டர் ராஜேந்திரன் என்பவருக்கு முக்கிய பங்கு இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.



1968 லிருந்து நடந்துவரும் ஐ.பி.சி.ஏ. லேபரடரீஸ் என்ற மருந்துக் கம்பெனியை 1975ல் அமிதாப் வாங்கி நடத்த ஆரம்பித்தார். இந்தக் கம்பெனியில் தற்போது அமிதாப்பின் மனைவி ஜெயபாதுரி, தம்பி அஜிதாப், அவர் மனைவி ரமோலா ஆகியோர் இயக்குநர்கள்.

இந்தக் கம்பெனி 1984ல் ரூ.10.5 லட்சம் லாபம் சம்பாதித்தது. அடுத்த வருடமான 1985ல் திடீரென ரூ. 85.85 லட்சம் லாபம் சம்பாதித்ததன் மர்மம் தெரியவில்லை! சோவியத் யூனியனுக்கு 23 கோடி ரூபாய் மதிப்புள்ள மருந்துகளை ஏற்றுமதி செய்ததாக, அமிதாப் குடும்பத்தினர் தாக்கல் செய்த வருமானவரி ரிக்கார்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஐ.பி.சி.ஏ. லேபரட்டரியின் தொழிற்சாலை பம்பாயில் உள்ள கன்டிவ்லி பகுதியில் உள்ளது. ஆனால் சோவியத் யூனியனுக்கு ‘மருந்து’ ஏற்றுமதி செய்தது ஐ.பி.சி.ஏ. அல்ல. இன்ட்சு (INDSU) என்ற கம்பெனியாகும். ஐ.பி.சி.ஏ.வின் இரண்டு இயக்குநர்கள் இன்ட்சுவிலும் இயக்குநர்கள். இன்னொரு இயக்குநர் டாக்டர் ராஜேந்திரன் என்பவர்.

இந்தக் கம்பெனி பம்பாய் அருகிலுள்ள கன்ட்லா துறைமுகத்தில் இருக்கும் வரிவிலக்கு பெற்ற ஏற்றுமதிப் பகுதியில் உள்ளது.

இப்போது சென்னை மீனம்பாக்கம் விமான நிலையமருகே வரிவிலக்கு பெற்ற ஏற்றுமதிப்பகுதி அமைக்கப்படுகிறதல்லவா, அதன் முன்னோடிதான் கன்ட்லா ஏற்றுமதிப் பகுதியாகும். இந்த ஃப்ரீட்ரேட் லோன்களில் தயாரிக்கும் பொருட்கள் முழுக்கவும் ஏற்றுமதி செய்யப்படவேண்டும். ஏராளமான வரிவிலக்கு உண்டு.

இந்த வரிவிலக்குச் சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு அமிதாப் மோசடி செய்துவருகிறார் என்பதே வெளிவந்துள்ள தகவலாகும்.

கன்ட்லாவில் உள்ள 'இன்ட்சு' கம்பெனி ஐந்தே நாட்களில் சோவியத் யூனியனுக்கு 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள மருத்துவக் கருவிகளை அனுப்பியிருக்கிற*தாம்! உண்மையில் இவை ‘இன்ட்சு’ கம்பெனியில் தயாரிக்கப்படவில்லை. ஸ்வீடன் நாட்டிலுள்ள கேம்பரோ என்ற நிறுவனம் தயாரித்த கருவிகள் பம்பாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டு சோவியத் யூனியன் செல்லும் கப்பலில் 'ஏற்றுமதி’ செய்யப்பட்டிருக்கின்றன.*

இப்படி, மோசடியாக பல பொருட்களை 'இன்ட்சு’ கம்பெனி சோவியத் யூனியனுக்கு அனுப்பி வருகிறது என்று கூறப்படுகிறது. தையல் மெஷின் ஊசிகள், டயர்கள், நீரழுத்தக்குழாய் பாகங்கள் முதலியவை எல்லாம் 'மருந்து' என்ற பெயரில் அனுப்பப்படுகிறதாம். சென்றவருடம் கேசியோ பர்சனல் கம்ப்யூட்டர்கள்கூட அனுப்பப்பட்டுள்ளன. கன்ட்லாவில் உள்ள 10 ஆயிரம் சதுர அடி தொழிற்சாலையில் தயாரிக்க முடியாத அதிக தொழில் நுட்பம் வாய்ந்த ஜப்பானிய எலெக்ட்ரான் மைக்ராஸ்கோப்கள், தைவான் நாட்டு குழாய்கள், ஸ்வீடன் மருத்துவக் கருவிகள் எல்லாம் அங்கு தயாரித்தவை என்ற பெயரில் சோவியத் யூனியனுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதில் சம்பந்தப்பட்டுள்ள அமிதாப் பச்சனின் கம்பெனியான 'இன்ட்சு'வில் இயக்குநராக உள்ள டாக்டர் ராஜேந்திரன் என்பவர் சோவியத் யூனியனுடன் அதிக நெருக்கமானவர். இவர் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. மாஸ்கோவில் உள்ள லுமும்பா பல்கலைக் கழகத்தில் படித்தவர். அங்கே அவருக்கு அலுவலகமும் வைத்திருக்கிறார்.

டாக்டர் ராஜேந்திரன் நிர்வாக இயக்குநராக உள்ள இன்னொரு கம்பெனி மேனன் இம்ப்பெக்ஸ் என்பதாகும். இந்தக் கம்பெனியும் அமிதாப் பச்சனின் ஐ.பி.சி.ஏ. லேபரடரீஸ், இன்ட்சு கம்பெனி எல்லாமே பம்பாயில் ஒரே முகவரியில்தான் இயங்குகின்றன. டெல்லியில் அமிதாப் பச்சனின் செயலாளரின் பங்களாவின் மாடியில் டாக்டர் ராஜேந்திரனின் உதவியாளர் டாக்டர் செப்ஸ்டியன் வசித்து வருகிறார்.

மேனன் இம்பெக்ஸ் கம்பெனிக்கு வெளிநாட்டுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்ய உதவியதற்காக 37 லட்ச ரூபாய் கிடைத்ததாக ஐ.பி.சி.ஏ. லேப்ரட்டரியின் 1985 ஆம் ஆண்டின் வரவு செலவு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேனன் இம்பெக்ஸ் கம்பெனியின் தலைமையகம் சென்னையாம். (சென்னையில் இந்தக் கம்பெனியின் பெயரில் டெலிஃபோன் டைரக்டரியில் எண் ஏதுமில்லை. என்.பி. மேனன் என்பவரின் எண்ணுக்கு பேசியதில் அவர் அதில் பணியாற்றுவதாகவும், இந்த விஷயம் குறித்து கருத்துக்கூற விரும்பவில்லை என்றும் நம்மிடம் தெரிவித்தார்)

இந்தக் கம்பெனியின் இயக்குநர்கள் என்.பி. மேனன், வி.பி. மேனன், டி.எம். மேனன் ஆகியோர். என்.பி. மேனன் இந்திய அரசின் வெளியுறவுத் துறையில் அதிகாரியாக இருந்து மாஸ்கோவில் இந்தியத் தூதரகத்தில் பணிபுரிந்தவர்.

டாக்டர் ராஜேந்திரனுக்கு பிரிட்டனில் ஒரு வங்கிக் கணக்கு உள்ளது. மேனன் இம்பெக்ஸ் கம்பெனி அவருக்கு 5 சதவிகித கமிஷன் (இது சட்டப் பூர்வமானது) தொகையாக 35 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. மேனன் கம்பெனியும், அமிதாபின் 'இன்ட்சு'வும் இந்தியக் கம்பெனிகள். ஆனால் ஏன் இந்தியாவில் பணத்தைத் தராமல் லண்டனில் கொடுக்கின்றன என்பது புரியவில்லை.

அமிதாப் பச்சனும் அவர் தம்பி அஜிதாப் பச்சனும் வெளிநாடுகளில் பணம் பதுக்கியதைவிட அதிகமாக பம்பாய் கண்ட்லா பகுதி தொழிற்சாலை மூலமாக சம்பாதிக்கின்றனர் என்பதுதான் பம்பாய் நிருபர் கவியின் கருத்து.

சட்டப்படி இங்கு தயாரிக்கும் பொருட்களையே ஏற்றுமதி செய்யவேண்டுமென்ற விதிக்கு மாறாக வெறுமே இறக்குமதி செய்து அதை சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்யும் வேலைதான் அமிதாபின் தொழிற்சாலையில் நடக்கிறது. சோவியத் யூனியனில் செல்வாக்குள்ள டாக்டர் ராஜேந்திரன், மேனன் போன்றோரின் உதவி ஏற்றுமதி ஆர்டருக்காகத் தேவைப்படுகிறது என்ற ரீதியில் வெளிவந்துள்ள தகவல்களிலிருந்து புரிகிறது.

கன்ட்லா பகுதி தொழிற்சாலையை 'ரெய்டு' செய்தாலே பல உண்மைகள் தெரிய வரலாம்.

ஆனால் அமிதாப் பச்சன் மீது எப்படி 'ரெய்டு' நடத்த முடியும்?

கடந்த வருடங்களாக இந்தியாவின் முதல் நம்பர் சூப்பர் ஸ்டாரான அமிதாப் மீது ஒரு வருமானவரி ரெய்டுகூட நடந்ததில்லை. ராஜ்கபூர், திலீப்குமார் போன்றோருக்குக்கூட கிடைக்காத சலுகையாக அமிதாப் பச்சனின் வருமானவரிக் கணக்கு, சினிமாக்காரர்களுக்கான பிரிவின் கீழ் வைக்கப்படாமல், உயர்மட்டப்பிரிவின் கீழ் வைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்தப் பிரிவு மிக முக்கியமான வி.ஐ.பிக்களை தொல்லை செய்யாமல் கவனிப்பதற்கான பிரிவாகும். இதன் கீழ் வரும் சலுகை பெற்ற முதல் சினிமா நடிகர் அமிதாப்தான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அமிதாப் பச்சனுடைய ராஜினாமா வெறும் கண்துடைப்பு என்பது தவிர வேறெப்படி இருக்க முடியும்?!

**12-08-1987**

உங்கள் விசிட்டர்